Cambridge Assessment International Education

# Cambridge International A Level

**TAMIL** **9689/21**

Paper 2 Reading and Writing **October/November 2023**

INSERT **1 hour 45 minutes**

*0345333064-I*

**INFORMATION**

- This insert contains the reading passages.
- You may annotate this insert and use the blank spaces for planning. **Do not write your answers** on the insert.

**தகவல்**

- இந்த இணைப்பில் படிக்கும் பகுதிகள் இணைக்கப்பட்டுள்ளன.
- இந்த இணைப்புப் பகுதியில் விடைக்கான குறிப்புகளை. வெற்றிடத்தில் குறித்துக்கொண்டு திட்டமிடலாம். ஆனால் கேள்விக்கான **விடைகளை இங்கே எழுதக்கூடாது**.

This document has **8** pages. Any blank pages are indicated.

KI 312751/3
© UCLES 2023



https://xtremepape.rs/

## பகுதி 1

கட்டுரை ஒன்றைப் படித்துவிட்டு **1, 2, 3 கேள்விகளுக்குக்** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 1**

**சவால்கள்**

வாழ்க்கையில் வரும் ஒவ்வொரு சவாலும் எம்மை உலுக்கி கவலைகொள்ளச் செய்யும். சில சமயங்களில் நாள்தோறும் நடக்கும் சிறிய பிரச்சினைகளே பெரிய பிரச்சினைகளாக எமக்குத் தோன்றும்.

இன்று காலையில் எம்முடைய வேலைத் தளத்தின் நிர்வாகியிடமிருந்து இந்த வாரத்தில் சனி மற்றும் ஞாயிறு நாட்களிலும் நாங்கள் வேலை செய்ய வேண்டும் என்று தொலைபேசி அழைப்பு திடீரென்று வருகின்றது என்று வைத்துக்கொள்வோம். ஆனால், அந்த நாட்களில் நாங்கள் எங்களது நண்பர்களைப் பல மாதங்களுக்குப் பின்னர் சந்திக்க முடிவெடுத்து இருந்திருப்போமாயின் இத்தொலைபேசி அழைப்பு மிகுந்த ஏமாற்றத்தையும் கோபத்தையும் தருவதாக இருக்கும். திடீரென நண்பர்களுக்கு எப்படி இதை விளக்குவது என்று மனம் தடுமாறிக் கவலைகொள்ளத் தொடங்கும்.

அத்தொலைபேசி அழைப்புக்குப் பின்னர் நாங்கள் காலை உணவைத் தயாரிக்க குளிர்சாதனப் பெட்டியைத் திறந்து முட்டைகளை எடுக்கும்போதுதான் முட்டைகள் பழுதாகி இருப்பது தெரிகின்றது. வேறு உணவு தயாரிப்பதற்கும் வீட்டில் பொருட்கள் இல்லை. கடைக்குச் சென்று உணவுப் பொருட்களை வாங்கி வரலாம் என்று புறப்படும்போதுதான் எங்களுக்கு மிகவும் பிடித்தமான, எப்போதும் அணியும் ஆடை துணி துவைக்கும் இயந்திரத்திற்குள் இருப்பது தெரிகின்றது. விரக்தியும் ஏமாற்றமும் தலைதூக்க அன்றைய நாளை 'மோசமான நாள்' என்று ஏமாற்றத்துடன் பெயரிட்டுக் கொள்வோம்.

சிந்தித்துப் பார்ப்போமாயின் உண்மையில் அன்றைய நாள் நல்ல நாளாகவே அமைந்திருக்கும். எமது மன அழுத்தமும் திட்டமிடாத் தன்மையும் அந்த நாளை அப்படிக் காட்டுகின்றது. தொலைபேசி அழைப்பு வந்த நேரத்திலிருந்து மனம் எதையும் எதிர்மறையாகச் சிந்திக்கத் தூண்டும். முட்டைகள் வாங்கிப் பல நாட்களாகி விட்டன என்றும், அவை பழுதாவதற்குச் சந்தர்ப்பங்கள் அதிகம் என்பதும் ஏற்கனவே தெரிந்த விடயம். வீட்டில் உணவுப் பொருட்கள் இல்லை என்பதும் ஏற்கனவே தெரிந்த விடயம். எனினும் எமது எதிர்மறையான மனப்போக்கு அந்த நாளை கெட்ட நாளாகக் காட்டும். சிறிய பிரச்சினையைப் பெரிய பிரச்சினையாகக் காட்டும்.

எனவே, வாழ்க்கையில் சவால்களை எதிர்நோக்குவதற்கு முதன்மையாக எமக்குத் தேவைப்படுவது நேர்மறையான சிந்தனையை வளர்த்துக் கொள்ளுதலாகும். சவால்கள் தோன்றும்போது சாதாரணமான நாளில் தோன்றும் பிரச்சினையைப் போல் அதனையும் கருதி, அந்தப் பிரச்சினையைப் பற்றிக் கவலை கொள்ளாது அதற்கான தீர்வு என்ன எனச் சிந்திப்பது அவசியமாகும். தனித்து நின்று பிரச்சினைகளை எதிர்கொள்வதைவிட அப்பிரச்சினைகளை நெருங்கிய நண்பர்களுடனும் சொந்தக்காரர்களுடனும் பகிர்ந்துகொள்ள வேண்டும். அவர்களது ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வது பெரும் பயனைத் தரும்.

© UCLES 2023

https://xtremepape.rs/

இதற்கெல்லாம் மேலாக, சவால்களை எதிர்கொள்வதற்கு உங்கள் சொந்த உணர்வுகளுக்கு நீங்கள் முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும். துக்கத்தை மறைக்க போலியான முகமூடி அணிவது பிரச்சினைகளை மேலும் பெரிதாக்கும். எனவே, அழ வேண்டும் போல் இருந்தால் அழுவதும், அந்தத் துக்கங்களை 'டயரி' ஒன்றில் எழுதுவதும் மன அழுத்தத்தைக் குறைத்து சவால்களைத் தனித்து எதிர்கொள்ள உதவும். பல பெரிய தலைவர்களின் வாழ்க்கையில் பல துக்கங்கள் நடந்திருந்தும் அவர்கள் வெற்றிகரமான வாழ்க்கையை நடத்தியிருக்கின்றார்கள். அவற்றை அறிவதும் நமக்கு ஊக்கத்தைத் தரும். உலகிலுள்ள எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகள் உள்ளன. இது பலருக்குத் தெரிவதில்லை.

© UCLES 2023


https://xtremepape.rs/

## பகுதி 2

இப்பொழுது இரண்டாம் கட்டுரையைப் படித்துவிட்டு **4, 5 கேள்விகளுக்குக்** கேள்வித்தாளில் விடை அளிக்கவும்.

**கட்டுரை 2**

**சவால்களை எதிர்கொள்ளும் முறைகள்**

நம் எல்லோருக்குமே எமது வாழ்க்கை தொடர்பான சவால்களும் அவற்றை எதிர்கொள்ளும் பயமும் இருக்கத்தான் செய்கின்றன. எனினும், இவற்றை எல்லாம் எதிர்கொண்டு, திடகாத்திரத்துடன் வாழ்க்கையில் முன்னேறி சாதிப்பது அவசியமாகும்.

சாரதா தனது கடின உழைப்பால் ஒரு வணிக நிறுவனத்தில் பணியாற்றுவதுடன் சிறுவர்களுக்கான பிறந்தநாள் கொண்டாட்ட நிறுவனமொன்றையும் நடத்தி வருகின்றாள். அவள் தனது இளமைக் காலம் பற்றிய நினைவுகளை பலரோடும் பகிரும்போது, “எனக்கு கவிதைகள் எழுதுவதற்கும் அவற்றைப் பாட்டாகப் பாடுவதற்கும் மிகவும் விருப்பம். எனினும், அவற்றைப் பலருக்கும் முன்னிலையில் பாடுவதற்கு பயம் இருந்தது. அத்துடன் விமர்சனங்களை ஏற்றுக்கொள்ளும் மனத் தைரியமும் இருக்கவில்லை. பெண்ணாகப் பிறந்த தாழ்வு மனப்பான்மையும் அடி மனதை உறுத்தும். பல்கலைக்கழகத்தில் சேர்ந்தபோது எனக்கு பணத் தேவை அதிகரித்தது. அப்போதுதான் நான் எனது திறமைகளை வீணடிப்பது புரிந்தது. சில நெருங்கிய நண்பர்களின் உரிய ஆலோசனையோடு, சிறுவர்களுக்கான பிறந்தநாள் பொழுதுபோக்கு நிறுவனமொன்றை ஆரம்பித்தேன். பிள்ளைகளது பிறந்தநாள் விழாக்களிலே எனது சொந்தப் படைப்புகள் பெரு வெற்றி பெற்றன. அதில் சில பாடல்கள் பத்திரிகைகளில் வெளியாகி எனக்குப் புகழைத் தந்தன. பின்னர், அப் பாடல்கள் பல ஆயிரம் பவுண்களை லண்டனில் ஈட்டுவதற்கு உதவின” என்று கூறினாள். சாரதாவின் வாழ்க்கை பலருக்கும் முன்மாதிரியானது. நேர்மறையான சிந்தனையின் அவசியத்தை அது வலியுறுத்துகின்றது.

கண்ணன் தனது நெருங்கிய நண்பனான விமலன் பற்றி வியந்து கூறிய ஒரு நிகழ்வும் இத்தகையதே. “நான் எப்போதும் விமலனைப் பார்த்து ஆச்சரியப்படும் விடயம், எதையும் இயல்பாக எடுக்கும் அவனது மனத்திடமாகும். ஒருமுறை வாகன விபத்தில் அவன் மாட்டிக்கொண்டான். உடலில் பலத்த காயங்களுடனும் கையில் கண்ணாடித் துண்டுகளுடனும் அவனுக்கு அவசர சிகிச்சை அளிக்க மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். மருத்துவர்கள் அனைவரின் முகத்திலும் விமலனைக் காப்பாற்ற வேண்டும் என்ற பதட்டமும் அவசரமும் தெரிந்தது. அறுவைச் சிகிச்சை அறையில் சிகிச்சைக்கு முன்னர் கேட்கப்படும் வழமையான கேள்விகளுள் ஒன்றான ‘ஏதேனும் ஒவ்வாமை உள்ளதா’ என்று மருத்துவர் கேட்டார். விமலனுக்கு எந்த ஒவ்வாமையும் இல்லாவிட்டாலும் தனக்கு கண்ணாடியால் ஒவ்வாமை இருப்பதாகவும் தனது உடலிலுள்ள கண்ணாடிகளை அகற்றும்படியும் நிதானமாகவும் நகைச்சுவையாகவும் கூறினான். இது பதட்டத்துடன் இருந்த மருத்துவர்கள் அனைவரையும் புன்னகைக்க வைத்தது”.



https://xtremepape.rs/

சவாலான சமயத்தில் விமலனது மனத்திடமும், அவனது நகைச்சுவை உணர்வும் அவனுக்கு மட்டுமல்லாமல் அவனைச் சுற்றியுள்ளவர்களுக்கும் உதவியது. நம்மைச் சுற்றியுள்ள அனைத்து பயங்களும் சவால்களும் நமது உள்மனக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டவை என்பதை எப்போதும் உணர வேண்டும். சிலர் பணம் சம்பாதிப்பது என்பது தமக்கான மட்டுமேயானது என்று நினைக்க, மற்றும் சிலரோ பணம் சம்பாதிப்பதன் நோக்கமே பிறருக்கு உதவுவதுதான் என்று கருதுவார்கள். இத்தகைய சிந்தனை ஒவ்வொருவரினதும் குடும்பப் பின்னணி மற்றும் வளர்க்கப்பட்ட விதத்தைச் சார்ந்து வேறுபடும். இதுபோன்றதுதான் சவால்களை அணுகும் விதமுமாகும். சவால்களை எதிர்கொள்வது என்பது எமக்குப் பிறவியிலேயே தோன்றிய ஒன்றல்ல. அது நாம் வளரும் சூழ்நிலையைப் பொறுத்து அமையும்.

குழந்தைப் பருவத்திலிருந்தே நமது மனத் தைரியத்தை வளர்த்துக்கொள்வது அவசியமாகும். சிறுவர்களுக்கென்று எழுதப்படும் புனைகதைகளில் வரும் அதி சக்தி வாய்ந்த கதாபாத்திரங்கள் சிறுவர்களது கோழைத்தனத்தைப் போக்க உதவலாம். ஆபத்தை எதிர்கொள்ளும் தைரியத்தை வளர்க்கவும், சவாலான சமயங்களில் சமயோசிதமாக நடக்கவும், தன்னம்பிக்கையை வளர்க்கவும் உதவுவனவாகவும் இருக்கும். இப் பாத்திரங்கள் சிறுவர்களுக்கான முன்மாதிரிகளாக விளங்குகின்றன.

© UCLES 2023


https://xtremepape.rs/

BLANK PAGE



https://xtremepape.rs/

**BLANK PAGE**



https://xtremepape.rs/

**BLANK PAGE**

Permission to reproduce items where third-party owned material protected by copyright is included has been sought and cleared where possible. Every reasonable effort has been made by the publisher (UCLES) to trace copyright holders, but if any items requiring clearance have unwittingly been included, the publisher will be pleased to make amends at the earliest possible opportunity.

To avoid the issue of disclosure of answer-related information to candidates, all copyright acknowledgements are reproduced online in the Cambridge Assessment International Education Copyright Acknowledgements Booklet. This is produced for each series of examinations and is freely available to download at www.cambridgeinternational.org after the live examination series.

Cambridge Assessment International Education is part of Cambridge Assessment. Cambridge Assessment is the brand name of the University of Cambridge Local Examinations Syndicate (UCLES), which is a department of the University of Cambridge.



https://xtremepape.rs/